# பத்திரிக்கை செய்தி

**கிருஷ்ணகிரி, மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ச.தினேஷ்குமார், இ.ஆ.ப., அவர்கள் அளித்தள்ள செய்தி:-**

கிருஷ்ணகிரி, அரசு மருத்துவக் கல்லூரியில் காலியாக உள்ள மருத்தவம் சார்ந்த ஓராண்டு சான்றிதழ் படிப்புகளில் சேர விருப்பமுள்ள மாணவ / மாணவியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 08.09.2025 முதல் 12.09.2025 முடிய பெறப்பட்டது அதில் 40 (நாற்பது) மாணவ / மாணவியர்கள் இன சுழற்சி அடிப்படையில் 16.09.2025 தேரிவு செய்யப்பட்டு பாடப்பிரிவுகளில் 20.09.2025 க்குள் சேர்க்கை பெற கால அவகாசம் அளிக்கப்பட்டிருந்தது. அதில் 09 (ஒன்பது) மாணவ / மாண்வியர்கள் மட்டுமே சேர்க்கை பெற்றுள்ளனர்.

பூர்த்தியாகாமல் காலியிடமாக உள்ள Left Over Seats -க்கான பாடப்பிரிவுகளில் நேரடி சேர்க்கை (Walk in Interview) மூலம் தகுதியான மாணவ / மாணவியர்கள் தெரிவு செய்யப்பட்டு கீழ்கண்ட பாடப்பிரிவுகளான 1. இதய அதிர்வலை (ம) மன அழுத்த சோதனை பாடப்பிரிவில் 05 (ஐந்து) இடங்கள், 2. அவசர சிகிச்சை பிரிவு நுட்புனர் பாடப்பிரிவில் 07 (ஏழு) இடங்கள், 3. டயாலிசிஸ் டெக்னிசியன் பாடப்பிரிவில் 08 (எட்டு) இடங்கள், 4. மயக்கவியல் பாடப்பிரிவில் 09 (ஒன்பது), 5. அறுவை அரங்க உதவியாளர் பாடப்பிரிவல் 05 (ஐந்து ) இடங்கள் மற்றும் 6. எலும்பு முறிவு சிகிச்சை உதவியாளர் பாடப்பிரிவில் 07 (ஏழு) இடங்கள் நேரடி சேர்க்கை மூலம் நிரப்பப்படவுள்ளன.

எனவே கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 12 ஆம் வகுப்பில் அறிவியல் பாடப்பிரிவு பயின்று தேர்ச்சிப்பெற்றுள்ள மாணவ/ மாணவியர்களில் 17 வயது நிரம்பியுள்ள மாணவ/ மாணவியர்கள் நேரடி சேர்க்கை பெற (Walk in Interview) 22.09.2025 முதல் 30.09.2025 மாலை 05.00 மணிக்குள் வருகைத்தந்து பாடப்பிரிவில் சேர்ந்துக்கொள்ளலாம் என தெரிவிக்கப்படுகிறது.

பிற்பட்ட வகுப்பினருக்கான பாடப்பிரிவுகளில் சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் பெறப்படாததால் இவ்வகுப்பில் அதிகமான காலியிடங்கள் உள்ளதால் பிற்பட்ட வகுப்பினை சார்ந்த மாணவ / மாணவியர் நேரடி சேர்க்கையில் பெருமளவு கலந்துக்கொண்டு பயன்பெறுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**நேரடி சேர்க்கையின் போது கீழ்கண்ட அசல் ஆவணங்கள் கொண்டுவர வேண்டும்.**

- மேல்நிலைப்பள்ளி மற்றும் பத்தாம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ்
- மாற்றுச் சான்றிதழ்
- இருப்பிடச் சான்றிதழ் (பொருந்துமாயின்)
- சாதிச்சான்றிதழ்
- வயதுச் சான்று (பள்ளிச் சான்றிதழ் / பிறப்புச் சான்றிதழ்)
- மாற்றுத்திறனாளி எனில் மாவட்ட மருத்தவ குழுவில் பெற்றப்பட்ட சான்று
- ஆதார் அட்டை

கல்வி கட்டணம் ரூ.1,450/- மட்டுமே.

முதல்வர்
அரசு மருத்துவக் கல்லூரி,
கிருஷ்ணகிரி

மாவட்ட ஆட்சித்தலைவர்
கிருஷ்ணகிரி

3/4